எண்ணெய்க்கு ரொம்ப மவுசு இருந்தது. அங்கேயும் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கேயும் இப்போது இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

Sri M. SELVARAJ : அரசாங்கத்தார் அவர்கள் இந்த ஆலை கட்டப்படுவதற்காகக் கொடுத்த பணத்தை, ஆலையை விற்பதன் மூலம் திரும்பப் பெறப் போவதாக கனம் அமைச்சர் தெரிவித்தார். ஆலையை விற்பதன் மூலம் கிடைக்கும் பணம் முழுவதையும் சர்க்காரே எடுத்துக் கொள்வது சரியா ? தனிப்பட்டவர்கள் பலர் "ஷேர் காபிடல் " ஆக ஆயிரக் கணக்கான ரூபாய் பணம் கொடுத்திருக்கிறார்களே, அவர்களுடைய பணம் என்ன ஆவது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அரசாங்கத்தின் நலனில்தான் கனம் அங்கத்தினர் முதலில் அக்கறை காட்டுவார் என்று நினைக்கிறேன். சட்டப்படி செய்ய வேண்டியதை கனம் அங்கத்தினர் ஆட்சேபிக்கமாட்டார் என்றும் நினைக்கிறேன். சட்டப்படி, கம்பெனிக்காரர்கள் அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய கடனைத்தான் முதலில் தீர்க்க வேண்டும் ; அதற்குப் பிறகு தான் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களைத் தீர்க்க வேண்டும்.

Pest affected areas in Tanjore district

* 790 *Q.*—Sri T. S. SWAMINATHA ODAYAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware that the taluks of Nagapattinam, Tiruthuraipundi, Mannargudi and Pattukkottai in Tanjore district have been declared as pest affected area ;

(*b*) whether there is sufficient stock of pesticides in all the Agricultural Depots in all these taluks ; and

(*c*) the restrictions, if any, of the sale of pesticides at concessional rates?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The answer is in the affirmative.

(*b*) Sufficient stocks of pesticides are stocked in all the Agricultural depots in Tanjore district.

(*c*) Pesticides are sold at concessional rates in places which are declared pest affected.

Sri S. LAZAR : எல்லா ஜில்லாக்களிலும் பரவலாக பூச்சிகளால் பாதிக்கப்பட்ட பயிர்கள் உள்ள இடங்களில் ஆகாய விமானங்களிலிருந்து அப்பயிர்களுக்கு பூச்சி மருந்தைத் தெளிக்கும் முறையை அரசாங்கம் கையாளுமா? எல்லா ஜில்லாக்களிலும் அதற்கான வாய்ப்பை சர்க்கார் ஏற்படுத்துமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த முறையைக் கையாளுவதற்கான வாய்ப்பை அரசாங்கம் எல்லா ஜில்லாக்களிலும் ஏற்படுத்தலாம். அதற்குரிய ஒரு ஆகாய விமானம் இப்போது மத்திய அரசாங்கத்தினிடம் இருக்கிறது. இது ரஷ்யாவிலிருந்து வரவழைக்கப்பட்டது என்று நினைக்கிறேன். அதை நமக்குக் கொடுக்கவும் மத்திய சர்க்கார் தயாராயிருக்கிறார்கள். ஆனால் அதிகமான, பரந்த நிலப்பரப்பில் மருந்து தெளிப்பதற்குத் தான் இந்த முறை பயன்படும்.

[1st November 1958

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, this kind of concession or subsidy is not given to all kinds of pesticides. Will the Government consider the desirability of extending this concession to all categories of pesticides?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If the hon. Leader of the Opposition would kindly write to me those particulars, I shall certainly look into them.

SRI M. C. MUTHUKUMARASWAMY : பயிர்கள் பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா என்ற சோதனை பிரஸ்தாப தாலூகாக்களில் மட்டும் தான் செய்யப்பட்டிருக்கிறதா, அல்லது மற்ற தாலூகாக்களிலும் செய்யப்பட்டிருக்கிறதா ? இந்த சோதனை வருஷா வருஷம் நடக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் தமது மூலக் கேள்வியில் எந்தத் தாலூகாக்களைப்பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார்களோ அவைகளைப்பற்றித் தான் நான் பதில் சொல்லமுடியும். எனவே தான் பிரஸ்தாப தாலூகாக்களை மட்டும் பதிலில் குறிப்பிட்டேன். எங்கெல்லாம் பயிர்கள் பரவலாக பூச்சிகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் பயிர்களை பூச்சிகளினின்றும் காப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறது.

SRI K. B. S. MANI : இந்தப் பூச்சி மருந்துகள் நல்ல பலனை அளிக்கக்கூடியவையாக இருந்தாலும் அவை விஷ மருந்துகளாக இருப்பதால் பல விவசாயிகள் அவைகளை உபயோகிப்பதில்லை. அவைகளை தகுந்தவாறு உபயோகிக்கத் தெரியாமல் அஜாக்கிரதையாக உபயோகித்தன் விளைவாக பல " பில்ட்மென் " களும் பல விவசாயிகளும் இறந்து போய்விட்டனர். இதைக் கண்டு பல விவசாயிகள் பூச்சி மருந்துகளை உபயோகிக்கப் பயந்து பூச்சிகளால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு மருந்து தெளிக்காமல் அவைகளை அப்படியே விட்டுவைக்கின்றனர். இதன் காரணமாக அவர்களுக்கு போதிய மகசூல் கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட நிலங்களின் சொந்தக்காரர்கள் கொடுக்க வேண்டிய வரியை வஜா செய்ய அரசாங்கம் உத்தேசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எல்லா பூச்சி மருந்துகளுமே அவ்வளவு ஆபத்தானது என்று சொல்வதற்கில்லை. எல்லா பூச்சி மருந்துகளுமே ஆபத்தானது என்று சொல்வது, விவசாயிகளிடையே அனுவசியமான பீதியைத்தான் உண்டுபண்ணும். ஒன்றிரண்டு மருந்துகள் மிகவும் ஜாக்கிரதையாக உபயோகிக்கப்பட வேண்டியவை. அவைகளை ஜாக்கிரதையாக உபயோகிக்க வேண்டுமென்று அப்போதைக்கப்போது பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. ஆபத்து நேரிடுமோ என்ற பயத்தால் விவசாயிகள் பூச்சி மருந்துகளை உபயோகிக்கவில்லை என்று சொல்லி வரிவஜா கேட்பது சரியல்ல.

SRI S. M. ANNAMALAI : பயிர்களில் பூச்சி நோய் அதிகமாகப் பரவுவதற்குக் காரணம் உடனடியாக தடுப்பு நடவடிக்கை எடுக்காதது தான். உடனடியாக நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம், போதிய பூச்சி மருந்துகளும், போதிய சிப்பந்திகளும், போதிய " ஸ்ப்ரேயர் " களும் அரசாங்கத்திடம் இல்லாதது தான். ஸ்ப்ரேயர்களை அதிகரிக்க வேண்டுமென்று சர்க்காருக்கு விவசாய இலாகாவில் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. பூச்சி மருந்துகளையும், ஸ்ப்ரேயர்களையும் சிப்பந்திகளையும் அதிகரிக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பூச்சி மருந்துகளைப் பரவலாகத் தெளிக்க வேண்டுமானால், நல்ல ஸ்ப்ரேயர்களை உபயோகிக்க வேண்டும் ; ஸ்ப்ரேயர்கள் நன்றாக இயங்கக்கூடிய நிலைமையில் இருக்க வேண்டும். ஜப்பானில் கூட வருஷா வருஷம் ஸ்ப்ரேயர்களை உபயோகிக்

1st November 1958]

கிறார்கள். அந்த வேலை சம்பந்தப்பட்ட ஜப்பான் நிபுணர்கள் இந்த உண்மையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஸ்ப்ரேயர்களை அதிகரிப்பதில் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

SRI T. SAMPATH : பிரஸ்தாப நான்கு தாலூகாக்களில் மட்டும் எப்போதும் பூச்சி நோய் வருவதற்குக் காரணம் என்ன ? பயிர்களுக்குப் பூச்சி நோய் வருவதற்கான காரணங்களை அரசாங்கம் கண்டு பிடித்திருக்கிறதா ? அதற்கான ஆராய்ச்சியை அரசாங்கம் செய்திருக்கிறதா ? செய்திருந்தால், பயிர்களுக்குப் பூச்சி நோய் வருவதை நிரந்தரமாகத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்யப்போகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தாலூகாக்களில் தான் பயிர்களுக்குப் பூச்சி நோய்கள் வருகின்றன என்பது சரியல்ல. அந்தத் தாலூகாக்களைப்பற்றி மட்டுமே மூலக் கேள்வியில் கேட்கப்பட்டிருந்தால், அவைகளில் பயிர்களுக்கு பூச்சி நோய்கள் வருகின்றன என்று சொன்னேன். மற்ற தாலூகாக்களிலும் பயிர்களுக்கு பூச்சி நோய்கள் வருகின்றன. அந்த நோய்களின் பெயர்கள் என்னவென்றால் stem borer, green jassid, fulgorid, rice mealy bug, field rates இந்த நோய்களிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN : ரசாயன உரங்களை அளவிற்கு மிஞ்சிப் போடுவதால் பயிர்கள் பூச்சிகளுக்கு அதிகமாக இரையாகின்றன என்பது உண்மை தானா ? ரசாயண உரங்களை கிரகித்துக்கொள்வதால், பயிர்களுக்குப் பூச்சி நோய்களை எதிர்க்கும் சக்தி குறைகிறது என்பது உண்மை தானா ? அப்படியானால் இந்தப் பிரச்னையைத் தீர்க்க அரசாங்கத்தார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : உற்பத்தியை அதிகரிப்பதற்கு ரசாயன உரங்களைப் போட வேண்டுமென்ற ஒரு கருத்து இருந்து வருகிறது. ரசாயன உரங்களை கிரகித்துக்கொள்ளும் பயிர்களுக்கு நோய்களை எதிர்க்கும் சக்தி குறைகிறது என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. ஒன்றுக்கொன்று முரணான இந்த இரண்டு கருத்துக்களும் " கல்யாணம் பண்ணினால் பைத்தியம் தெளியும், பைத்தியம் தெளிந்தால் தான் கல்யாணம் பண்ணலாம் " என்ற கருத்துக்களைப் போல் இருக்கின்றன. (சிரிப்பு). உற்பத்தியை அதிகரிப்பதற்கு எல்லா ரசாயன உரங்களையும் போட வேண்டியதில்லை. தகுந்த ரசாயன உரங்களைப் போடலாம். ரசாயன உரங்களைப் போடுவதன் விளைவாக பயிர்களுக்கு பூச்சி நோய்கள் வந்தால், அப்போது அந்த நோய்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

MR. SPEAKER : இந்தக் கேள்விக்குப் பல உப கேள்விகள் போடப்பட்டுவிட்டன. இன்னும் பல கேள்விகள் போடப்பட வேண்டியிருக்கின்றன. ஆகவே இந்தக் கேள்விக்கான உப கேள்விகள் இத்துடன் முடியட்டும். அடுத்த கேள்வியை எடுத்துக்கொள்வோம்.

Export of hides and skins

* 790-A *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1951 முதல் 1957-வது ஆண்டு வரை நமது இராஜ்யத்திலிருந்து—

(1) என்னென்ன

(2) எவ்வளவு மதிப்புள்ள

(3) எந்தெந்த நாடுகளுக்கு தோல் ஏற்றுமதி ஆகிறது ?